بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *06/10/2023* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**பத்ர் போர் தொடர்பாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையின் அம்சங்கள் மற்றும் வரலாற்றுச் சம்பவங்கள் குறித்த ஈமானுக்கு வலுவூட்டும் குறிப்பு**

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

கடந்த குத்பாவில் நான் அஸ்மா கொல்லப்பட்ட சம்பவத்தை எடுத்துக் கூறியிருந்தேன். இதே போன்ற இன்னொரு சம்பவமும் உள்ளது என்று நான் கூறியிருந்தேன். இரண்டாவது சம்பவமும் வெறும் இட்டுக்கட்டப்பட்ட ஒரு கதையாகவே தெரிகிறது. இந்த இரண்டாவது சம்பவம் யூதனான அபூ அஃபக் கொல்லப்பட்டதாகும்.

இதன் விவரம் இவ்வாறு எடுத்துரைக்கப்படுகிறது:- ஒருநாள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சஹாபாவிடம் கேட்டார்கள்: எனக்காக இந்தக் கீழ்த்தரமானவனை, அதாவது, (யூதனான) அபூ அஃபக்கை யாரால் சமாளிக்க முடியும்? அதாவது, யாரால் அவன் கதையை முடிக்க முடியும்?

அபூ அஃபக் எனும் இவன் மிகவும் வயது முதிர்ந்தவனாக இருந்தான். எதுவரையெனில், அவனுக்கு 120 வயதாகி விட்டிருந்ததாகக் கூறப்படுகிறது. ஆனால், இவன் மக்களை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எதிராகத் தூண்டி விட்டு வந்தான். மேலும், தன்னுடைய கவிதைகளில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எதிராகத் தீயச் சொற்களைக் கூறியும் அவமரியாதையும் செய்தும் வந்தான்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இந்த வழிகாட்டலின் பேரில் ஹஸ்ரத் ஸாலிம் பின் உமைர் (ரலி) அவர்கள் எழுந்தார்கள். (இவர்கள் அல்லாஹ்வின் மீதான அச்சத்தில் மிகவும் அதிகமாக அழுது வந்தவர்களில் ஒருவர் ஆவார்கள். இவர்கள் பத்ர் யுத்தத்திலும் கலந்து கொண்டிருந்தார்கள்.)

ஆக, அவர்கள் இவ்வாறு பணிவுடன் கூறினார்கள்: நான், ஒன்று அபூ அஃபக்கைக் கொன்று விடுவேன்; இல்லையென்றால், இந்த முயற்சியில் எனது உயிரை விட்டு விடுவேன் என்று உறுதி எடுத்துக் கொள்கிறேன்.

எனவே, இதற்குப் பிறகு இவர்கள் தக்க சந்தர்ப்பத்திற்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள்.

ஒருநாள் இரவு நேரமாக இருந்தது. கடுமையான வெப்பம் இருந்தது. அபூ அஃபக் தனது வீட்டிற்கு வெளியில் இருந்த முற்றத்தில் உறங்கிக் கொண்டிருந்தான். இவர்களுக்கு இதைப் பற்றி தெரிய வந்ததும், உடனடியாக புறப்பட்டார்கள். அங்கு சென்றடைந்ததும் இவர்கள் தமது வாளை அபூ அஃபக்கின் கல்லீரலில் வைத்தார்கள். அதில் முழு அழுத்தம் கொடுத்து விட்டார்கள். எதுவரை என்றால், வாள் அவனது வயிற்றைத் தாண்டி படுக்கையில் சென்று தைத்தது.

அத்துடன் இறைவனின் எதிரி அபூ அஃபக் பயங்கரமாக கத்தினான். இவர்கள் அவனை அதே நிலையில் விட்டுவிட்டு அங்கிருந்து திரும்பி வந்தார்கள். அவன் கத்தும் சத்தம் கேட்டு உடனடியாக மக்கள் ஓடி வந்தார்கள். அவனுடைய சில கூட்டாளிகள் அப்பொழுதே அவனை வீட்டிற்குள் தூக்கிச் சென்றார்கள். ஆனால், இறைவனின் அந்த எதிரி, உயிரை பறிக்கக் கூடிய அந்தக் தாக்குதலைத் தாங்க முடியாமல் மரணித்து விட்டான்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இந்த சம்பவத்தை விவரித்தவாறு கூறினார்கள்:* இந்த சம்பவமும் நம்பத்தகுந்த எந்த அறிவிப்பு வரிசையிலும் அறிவிக்கப்படவில்லை. சிஹாஹ் சித்தா (எனப்படும் ஆறு ஹதீஸ்) நூல்களிலும் இது குறிப்பிடப்படவில்லை. சில வரலாற்று நூல்களில் இந்த சம்பவம் குறிப்பிடப்பட்டுள்ளது.

உதாரணமாக, சீரத் ஹலபிய்யா, ஷரஹ் ஸர்க்கானீ, தபக்காத்துல் குப்ரா இப்னு சஃது, சீரத்துன் நபவிய்யஹ் இப்னு ஹிஷ்ஷாம், அல் பிதாயா வன் நிஹாயா, கிதாபுல் மகாஸீ அல் வாக்தீ, சுபுலல் ஹுதா வர் ரஷாத் முதலியவற்றில். ஆனால், பெரும்பாலான வரலாற்று நூல்களில் இந்த சம்பவம் குறிப்பிடப்படவில்லை. உதாரணமாக, அல் காமில் ஃபித்தாரீக், தாரீக் தபரீ, தாரீக் இப்னு குல்தூன் முதலியவை.

அஸ்மா சம்பவம் போன்று இந்த சம்பவம் தொடர்பாகவும் இவ்வாறு சாட்சி பகரப்படுகிறது: (அபூ அஃபக் ஆகிய) அவன் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எதிராக பகைமையில் மக்களைத் தூண்டி விட்டு வந்தான். பத்ர் யுத்தத்திற்குப் பிறகு, இவன் உள்ளப் பகைமை மற்றும் பொறாமையில் இன்னும் அதிகரித்து விட்டான். பகிரங்கமாக கிளர்ச்சியாளனாகி விட்டிருந்தான்.

அபூ அஃபக் கொல்லப்பட்டது பற்றிய அறிவிப்பின் உட்புற முரண்பாடுகளும் இந்த சம்பவத்தை ஐயத்திற்குரியவையாக ஆக்கி விடுகின்றன.

உதாரணமாக, **முதலாவது** கொன்றது யார் என்பதில் உள்ள வேறுபாடு. இப்னு சஃது மற்றும் வாக்தீயின் பார்வையில், அபூ அஃபக்கைக் கொன்றவர் ஸாலிம் பின் உமைர் ஆவார்கள். ஆனால், மற்ற பிற அறிவிப்புகளிலோ ஸாலிம் பின் அம்ர் அவர்கள் என்று கூறப்பட்டுள்ளது. இப்னு உக்பா அவர்களின் பார்வையிலோ ஸாலிம் பின் அப்துல்லாஹ் அவர்கள் அவனைக் கொன்றார்கள்.

**இரண்டாவது,** கொன்றதற்கான காரணத்தில் முரண்பாடு உள்ளது. இப்னு ஹிஷ்ஷாம் மற்றும் வாக்தீயின் பார்வையில் ஸாலிம் அவர்கள் தாமே சினங்கொண்டு அவனைக் கொன்றார்கள். ஆனால், சில அறிவிப்புகளின் அடிப்படையிலோ ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கட்டளையின் பேரில் அவன் கொல்லப்பட்டான்.

**மூன்றாவது,** மதத்தின் வேறுபாடு பற்றிய ஒரு விஷயமாகும். இப்னு சஃது அவர்களின் பார்வையில் அபூ அஃபக் ஒரு யூதனாக இருந்தான். வாக்தீ அவர்களின் பார்வையிலோ இவன் யூதனாக இருக்கவில்லை.

பிறகு, **(நான்காவதாக)** கொல்லப்பட்ட காலத்திலும் வேறுபாடு உள்ளது. வாக்தீ மற்றும் இப்னு சஃது ஆகியோரின் பார்வையில் இந்த சம்பவம் அஸ்மா பின்த் மர்வான் கொல்லப்பட்ட சம்பவத்திற்குப் பிறகுள்ள சம்பவம் ஆகும். இப்னு இஸ்ஹாக் மற்றும் இப்னு ஹிஷ்ஷாம் ஆகியோரின் பார்வையிலோ இந்த சம்பவம் அஸ்மா கொல்லப்பட்டதற்கு முன்னுள்ளதாகும்.

இந்தத் தெளிவான வேறுபாடுகளில் இருந்தும், இந்த சம்பவம் வெறும் புனையப்பட்ட கதையாகும்; கட்டுக்கதையாகும்; இதற்கு எந்த உண்மைத்துவமும் இல்லை என்பது வெளிப்படுகிறது.

ஒரு கற்பனைக்கு, அபூ அஃபக் கொல்லப்பட்டதாக ஏற்றுக் கொண்டாலும், அவனுடைய பிற குற்றங்களான, அரசாங்கத்தின் தலைவரைக் கொல்வதற்காகத் தூண்டிவிட்டது, இழிவுபடுத்தும் வகையிலான கவிதைகளைக் கூறி போருக்கு எழுச்சியூட்டியது, பொது அமைதியை ஆபத்தில் ஆழ்த்தியது மற்றும் போர் தீயை மூட்டியது ஆகியவையே மரண தண்டனைக்குப் போதுமானவையாகும்.

அரசாங்கத்திற்கு எதிராக கிளர்ச்சி நிரூபணமாகி விடும்போது இவற்றிற்காக இன்றைய நாள்களிலும் மரண தண்டனை வழங்கப்படுகிறது. ஏசி பேசியது மட்டும் இந்தக் கொல்வதற்குக் காரணமாக இருக்க முடியாது.

இவ்வாறே, அஸ்மாவின் சம்பவத்தைப் போன்று இங்கும் அபூ அஃபக் கொல்லப்பட்டதற்குப் பிறகு, யூதர்களிடமிருந்து எந்த எதிர் நடவடிக்கையும் நிரூபணமாகவில்லை. எனவே, அவர்கள் மௌனமாக இருந்தது, இந்த சம்பவம் கற்பனையானது என்பதற்குத் தகர்க்கும் ஆதாரமாகும்.

இந்த சம்பவங்கள் நடந்த காலமாக, பத்ர் யுத்தத்திற்கு முன்னுள்ள அல்லது சற்றே பிறகுள்ள காலம் எடுத்துக் கூறப்படுகிறது என்ற விஷயமும் நினைவிற் கொள்ளத்தக்கது.

முஸ்லிம்களுக்கும் யூதர்களுக்கும் இடையிலான முதல் மோதல் பனூ கைன்கா போர்தான் என்பதில் வரலாற்றாசிரியர்கள் அனைவரும் ஒருமித்திருக்கிறார்கள். பத்ருக்கு முன்னரும் ஏதாவது சம்பவம் நடந்திருந்தால், அவர்கள் இதற்குக் கீழ் அதைக் கண்டிப்பாகக் குறிப்பிட்டிருப்பார்கள்.

யூதர்கள் அபூ அஃபக் மற்றும் அஸ்மா கொல்லப்பட்ட சம்பவத்தின் அடிப்படையில், ‘முஸ்லிம்கள் செயல் ரீதியான சீண்டுதலில் தங்களை முந்திக் கொண்டார்கள்’ என்று பொருத்தமான முறையில் முஸ்லிம்கள்மீது ஆட்சேபனை செய்திருக்க முடியும்.

ஆனால், மதீனத்து யூதர்கள் இந்த சம்பவங்களை எடுத்துக் கொண்டு ஒருபோதும் இப்படி ஒரு கேள்வியை எழுப்பியதாகவோ அல்லது இந்த சம்பவங்கள் குறித்து கூச்சலிட்டதாகவோ எந்த வரலாற்றிலும் வரவில்லை. அவ்வளவு ஏன், இந்தக் கதைகளை அறிவித்துள்ள அந்த வரலாற்றாசிரியர்களுடைய நூல்களிலும்கூட குறிப்பிடப்படவே இல்லை.

ஒருவேளை (யூதர்களான) அவர்கள் ஆட்சேபனையை எழுப்பியிருக்கலாம்; ஆனால், முஸ்லிம் வரலாற்றாசிரியர்கள் அதைப் பற்றி குறிப்பிடாமல் இருந்திருக்கலாம் என்ற சிந்தனை யாருக்காவது ஏற்பட்டால், அது ஒரு தவறான, அடிப்படையற்ற சிந்தனையாக இருக்கும். ஏனென்றால், எந்தவொரு முஸ்லிம் ஹதீஸ் தொகுப்பாளரோ அல்லது வரலாற்றாசிரியரோ எதிரிகளின் எந்த ஆட்சேபனை மீதும் ஒருபோதும் திரையிடவில்லை.

உதாரணமாக, நக்லா போர் பற்றிய குறிப்பில், மக்கத்து நிராகரிப்பாளர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக, (முஸ்லிம்கள்) கண்ணியத்திற்குரிய மாதங்களை அவமதித்ததாக அவதூறு கூறிய போது, முஸ்லிம் வரலாற்றாசிரியர்கள் உன்னதமான நேர்மையுடன் அவர்களுடைய இந்த ஆட்சேபனையைத் தம்முடைய நூல்களில் பதிந்து விட்டார்கள். எனவே, இந்த சந்தர்ப்பத்திலும் யூதர்கள் தரப்பிலிருந்து ஏதாவது ஆட்சேபனை செய்யப்பட்டிருந்தால், வரலாறு அதைக் குறிப்பிடாமல் இருந்திருக்காது.

சுருக்கமாக, எந்தக் கோணத்தில் பார்த்தாலும்சரி, இந்த சம்பவங்கள் சரியானவையாக நிரூபணமாவதில்லை. மேலும், எப்படித் தெரிகிறது என்றால், ஒன்று யாரேனும் ஒரு மறைவான எதிரி யாராவது ஒரு முஸ்லிமோடு பொருத்தி இந்தக் கதைகளைக் கூறிவிட்டான். பிறகு, அவை முஸ்லிம்களின் அறிவிப்புகளில் இடம்பெற்று விட்டன.

அல்லது யாராவது ஒரு பலவீனமான முஸ்லிம், ‘கேடுவிளைவித்து வந்த சில நிராகரிப்பாளர்களைத் தனது கோத்திரத்தைச் சேர்ந்த மனிதர்கள் கொன்றார்கள்’ என்ற இந்தப் பொய்யான பெருமையைத் தனது கோத்திரத்தோடு பொருத்திக் கூறுவதற்காக, இந்த அறிவிப்புகளை வரலாற்றில் நுழைத்து விட்டார். (உண்மையை) அல்லாஹ்வே நன்கறிவான்.

அஸ்மா மற்றும் அபூ அஃபக் கொல்லப்பட்டது பற்றிய கற்பனை சம்பவங்களைக் குறித்து கூறியவாறு ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் சீரத் காத்தமுன்னபிய்யீனில் இவ்வாறு எடுத்துரைத்துள்ளார்கள்:

பத்ர் யுத்தத்தின் நிலைமைகளுக்குப் பிறகு(ள்ளவை என்று), வாக்தீ மற்றும் பிற வரலாற்றாசிரியர்கள் எத்தகைய இரண்டு சம்பவங்களை எழுதியுள்ளார்கள் என்றால், அவற்றிற்கு ஹதீஸ் நூல்களிலும் சரியான

வரலாற்று அறிவிப்புகளிலும் தடையம் கிடைப்பதில்லை. அறிவுப்பூர்வமாக கவனம் செலுத்தி பார்த்தாலும் அவை சரியானவையாக நிரூபணமாவதில்லை.

ஆனால், இவற்றால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எதிராக, வெளிப்படையில், ஓர் ஆட்சேபனைக்கான தோற்றம் உருவாகி விடுகிறது. எனவே, சில கிறிஸ்தவ வரலாற்றாசிரியர்கள் தங்களது வழக்கப்படி முற்றிலும் விரும்பத்தகாத வகையில் இவற்றை எடுத்துரைத்துள்ளார்கள். ஆனால், உண்மை என்னவென்றால், தகுதிச்சான்று மற்றும் திறனாய்வுக்கு முன்னால் இந்த சம்பவங்கள் சரியானவையாக நிரூபணமாவதே இல்லை.

இவை சரியானவையா என்பதில் ஐயம் ஏற்படுத்தும் முதல் சான்றாவது, ஹதீஸ் நூல்களில் இந்த சம்பவங்கள் பற்றிய குறிப்பு காணப்படுவதில்லை. இன்னும் சொல்வதாயின், ஹதீஸ் ஒரு பக்கம் இருக்கட்டும், சில வரலாற்றாசிரியர்களும் இவற்றைப் பற்றி கூறவில்லை. ஆனால், உண்மையிலேயே இது போன்ற சம்பவங்கள் நடந்திருந்தால், ஹதீஸ் நூல்களும் சில வரலாற்று நூல்களும் இவற்றைக் குறிப்பிடாமல் விட்டிருப்பதற்கு எந்தக் காரணமும் இருக்கவில்லை.

இந்த சம்பவங்களால், வெளிப்படையில், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மற்றும் அன்னாருடைய சஹாபா மீது ஒரு வகையில் ஆட்சேபனை விழுந்தது; எனவே, ஹதீஸ் தொகுப்பாளர்களும் சில வரலாற்றாசிரியர்களும் இவற்றைப் பற்றி கூறாமல் விட்டு விட்டிருப்பார்கள் என்று இங்கு ஐயம் கொள்ள முடியாது. ஏனென்றால், முதலில் இந்த சம்பவங்கள், அவை நடந்த (தாகக் கூறப்படும்) அந்த நிலைமைகளைக் கருத்தில் கொண்டவாறு பார்க்கையில் ஆட்சேபனைக்குரியவையல்ல.

இரண்டாவது, ஹதீஸ் மற்றும் வரலாற்றை ஓரளவாவது படித்திருக்கும் நபருக்கு இந்த விஷயம் (தெரியாமல்) மறைந்திருக்க முடியாது. அதாவது, முஸ்லிம் ஹதீஸ் தொகுப்பாளர்கள் மற்றும் வரலாற்றாசிரியர்கள் ஒருபோதும் எந்த ஓர் அறிவிப்பைப் பற்றிய குறிப்பையும், அதனால் இஸ்லாம் மற்றும் இஸ்லாத்தின் தோற்றுநர் (ஸல்) அவர்கள் மீது வெளிப்படையாக ஆட்சேபனை எழுகிறது என்பதன் அடிப்படையில் மட்டும் ஒருபோதும் குறிப்பிடாமல் விடவில்லை. இதற்கான காரணமாவது, அறிவிப்பு அடிப்படையில் சரியானதாகக் காணப்பெற்ற எந்தவொரு விஷயத்தையும், அதன் கருத்தின் காரணமாக, அவர்கள் ஒருபோதும் எழுதத் தயங்கியதில்லை என்பது அவர்கள் அனைவரும் கடைபிடிக்கும் ஒரு வழிமுறையாக இருந்தது.

ஒவ்வொரு விஷயத்திலும் எதிராக உள்ள அம்சத்தை எடுத்துக் கொள்ளும் மார்கோலிஸ் போன்ற **orientalist** கூட இந்த சம்பவங்கள் காரணமாக முஸ்லிம்களைக் குற்றஞ்சாட்டத் தக்கவர்களாகக் கூறவில்லை.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* இவையனைத்தும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களோடு பொருத்திக்கூறப்பட்டுள்ள, இட்டுக்கட்டப்பட்ட விஷயங்கள் ஆகும். இந்த வரலாற்றாசிரியர்கள் என்ன

எழுதினார்களோ, அதைப் பிற்காலத்தில் (வந்தவர்கள்) சரியான முறையில் நுணுகி ஆராய்ந்திருக்க வேண்டும்.

அல்லாஹ்வுக்கு நாம் நன்றி செலுத்துகிறோம். அவன் தனது பேரருளால் நமக்கு இந்தக் காலத்தின் இமாம் (அலை) அவர்களை ஏற்றுக் கொள்ளக்கூடிய நல்வாய்ப்பை வழங்கியுள்ளான். நாம் ஒவ்வொரு விஷயத்தையும் பார்த்து, ஆராய்ந்து, அதன் உண்மைத்துவத்தைப் புரிந்து கொண்டு, பிறகு, அதை எடுத்துரைப்பதற்கு முயற்சி செய்கிறோம். மேலும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது வருகின்ற இது போன்ற எந்தவோர் அவதூறாக இருந்தாலும் அதை நீக்குவதற்கு முயற்சி செய்கிறோம்.

இந்த விஷயங்களை வழக்கத்தில் கொண்டு வந்து தம்முடைய பலன்களை மட்டும் பெறக்கூடிய, இஸ்லாத்திற்கு அவப்பெயர் ஏற்படுத்த முயற்சி செய்யக்கூடிய அந்த அறிஞர்களுக்கும் அல்லாஹ் அறிவை வழங்குவானாக!

ஒருபுறமோ அவர்கள் தாம் இஸ்லாத்திற்குத் தொண்டு செய்வதாகக் கூறுகிறார்கள். ஆனால், உண்மையில், அவர்களுடைய செயல்களே அவர்களிடம் பயங்கரவாதத்தை ஏற்படுத்தி விட்டன. அல்லாஹ் அவர்களுக்கும் அறிவை வழங்குவானாக!

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இறுதியில் கனடாவைச் சேர்ந்த* ***பேராசிரியர் டாக்டர் நாஸிர் அஹ்மத் கான் சாஹிப்*** *பர்வேஸ் பர்வாஸீ அவர்கள், ரப்வாவைச் சேர்ந்த* ***ஷரீஃப் அஹ்மத் பட்டீ சாஹிப்*** *அவர்கள், நவாப்ஷாஹ் மாவட்டத்தின் முன்னாள் அமீர்* ***பேராசிரியர் அப்துல் காதிர் டாஹிரீ சாஹிப்*** *அவர்கள் மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த* ***பேராசிரியர் டாக்டர் முஹம்மத் ஷரீஃப் கான் சாஹிப்*** *அவர்கள் ஆகியோரின் வஃபாத்தை ஒட்டி அவர்களின் நற்குறிப்பை எடுத்துரைத்து, அவர்கள் அனைவரும் ஆற்றிய ஜமாஅத் தொண்டுகள் பற்றி குறிப்பிட்டார்கள்.*

*ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு, அவர்கள் அனைவருக்காகவும் ஜனாஸா காயிப் தொழுகை தொழவைப்பதாக அறிவிப்பு செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ

اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ

اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ

وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)**